வெளியீடு—௨௧௨.

78

நாற் சிறு கதைகள்

காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி.ஏ.
எழுதியன.

3303

REGISTRAR
27 FEB 193[illegible]



THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY.
TINNEVELLY LTD
TINNEVELLY :: & MADRAS

கழக வெளியீடு—உகஉ

நாற்சிறு கதைகள்

OFFICE OF THE REGISTRAR
22 FEB 1938
MADRAS

காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, பி.ஏ.,
எழுதியன

894·8113

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை

பதிப்புரிமை] 1937 [விலை அணு 4

1st Edition : Dec. 1937

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TINNEVELLY, & MADRAS.

Dec. 1937

The Jupiter Press, G. T., Madras.

முகவுரை

எளியவாகவும் இனியவாகவும் இருக்கும் சிறு கதைகளைச் சிறுவர்கள் மிகவும் விரும்பிக் கற்பார்கள். ஆகவே, அத்தகைய சிறுகதைகளைச் சீரிய தமிழ் நடையிற் பிழையின்றி எழுதி அவர்களைப் படிக்கச் செய்தால், அவர்களுடைய தமிழறிவு தானாகவே வளர்ச்சியுறும் என்பது உறுதி. இந்நோக்கங் கொண்டே நாற்சிறு கதைகள் என்ற இச் சிறு நூல் எழுதப்பட்டதாகும். இதனுட் காணப்படும் நான்கு கதைகளுள் முதற்கதை மட்டும் ஜெர்மனிநாட் டாசிரியர் கிரிம் என்பார் எழுதிய ஒரு கதையைத் தழுவி எழுதியதாகும்; ஏனைய மூன்றும் நம் தமிழ்நாட்டில் வழங்கும் பழங் கதைகளே. தொடக்கக்கல்வி வளர்ச்சிக்கு இது போன்ற சிறுநூல்கள் பயன்படுமென்பது கருதியே இந்நூல் வெளியிடப்படுகிறது.

சென்னை,
7-12-37

காழி. சிவ. கண்ணுசாமி.

பொருளடக்கம்

எண்		பக்கம்
க.	மார்த்தாண்டன் மணம் புரிதல்	7
உ.	பேராசை பெருங்கேடு	26
ங.	மதிவதனன்	36
ச.	குள்ளப் பெருமாள்	54

நாற்சிறு கதைகள்

மார்த்தாண்டனும் அவன் நண்பர்களும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 FEB 1938
MADRAS

நாற்சிறு கதைகள்

க. மார்த்தாண்டன் மணம்புரிதல்

I

முன்னொரு காலத்தில் கலியாணபுரம் என்ற ஊரில் வீரவர்மன் என்றோர் அரசனிருந்தான். அவனுக்கு மனைவியரிருவர். அவருள் மூத்தவள், முத்துநகை என்ற பெண்மகவொன்றைப் பெற்ற பின், நோயுற்று இறந்துவிட்டாள். இறந்து விடவே, அப்பெண்மகவை அரசனும், இரண்டாம் மனைவியாகிய வீரையும் மிகுந்த கருத்துடன் வளர்த்துவந்தார்கள். அக்குழந்தையும் அறிவிற் சிறந்து அழகே உருவாய் விளங்கி வந்தது. இவ்வாறிருக்கையில், குழந்தை முத்துநகைக்குப் பன்னிரண்டாவது வயது வந்தபோது, வீரவர்மன் எதிர்பாராத வகையில் ஒருநாள் திடீரென மாரடைப்புக் கண்டு இறந்துவிட்டான். பருவமடையாத முத்துநகையின் சார்பாக வீரை நாட்டைப் புரந்து வருவாளாயினள்.

தன் மாற்றாளின் மகளான முத்துநகை தன்னிலும் அழகிற் சிறந்து பொலிவது கொடுசூரியாகிய வீரையின் கண்ணை உறுத்திற்று. இந்நிலை

யில், பிறநாட்டு அரசிளங்குமரர்கள் பலர் முத்து நகையை மணக்க விரும்பிச் செய்திமேற் செய்தி யனுப்பி வந்தார்கள்; இது வீரைக்கு எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் இருந்தது. "யாராயிருந்தாலுஞ் சரி! நான் இடுகிற மூன்று கட்டளைகளை நிறைவேற்றிவைக்கிற ஒருவன் தான் முத்துநகையை மணக்க முடியும்; ஆனால், நிறைவேற்றி வைப்பதாக ஒப்புக்கொண்டு முன் வந்து நிறைவேற்றத் தவறினாலோ தலைபோய் விடும்" என்று பெண்கேட்க வருபவர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரிவித்துவிடுமாறு அவள் கட்டளையிட்டனள். இக்கட்டளைக் கிணங்க முன் வந்து, இளவரசர்கள் சிலர் உயிரிழந்தனர்; அதன்பின் முத்துநகையை மணம்புரிய வருபவர் தொகை வரவரக் குறைந்து வந்தது. இது நிற்க.

கலியாணபுர ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்கள் பலருள் பரிதிபுரக் குறுநில மன்னனும் ஒருவன். அவனுக்கு மார்த்தாண்டன் என்றொரு பிள்ளை யிருந்தான். அப்பிள்ளை இளமையிலிருந்தே அஞ்சா நெஞ்சு படைத்த ஆண்மகனாயிருந்து வந்தான். அழகிலுங் கல்வியிலுஞ் சிறந்தவனாக வும் அவன் விளங்கினான். அவன் கலியாண புரத்திலுள்ள முத்துநகையின் வரலாற்றைத் தன் நண்பனொருவன் ஒருநாள் சொல்லக் கேட்டான்;

கேட்டவுடன், அவளையே தேடிச் சென்று மண முடிப்பதென உறுதி செய்துகொண்டான். இதனை யறிந்த அவன் தந்தை எவ்வளவோ தடுத்தான்; தடுத்தும் பயனென்ன? தன்னந்தனியனாய் மார்த் தாண்டன் ஒருநாட் காலை கலியாணபுரம் நோக் கிப் புறப்பட்டுவிட்டான்.

புறப்பட்டு வரும் வழியில், அவன் தனக் கெதிரே சிறு குன்றொன்று அசைந்து புரள்வது போல் தோற்றக் கண்டான். கண்டவன் வியப் படைந்து அதனருகிற்சென்று பார்த்தான். அவன் கருதியதுபோன்று அசைந்து புரண்டது குன் றன்று; குன்றுபோன்ற ஒரு மனிதனே! நன்றாகப் பருத்துக் கொழுத்திருந்த குண்டனொருவனே!!

மார்த்தாண்டன் :—“அடே நீ யார்? எங் கிருப்பது? உன் பெயரென்ன?”

அம்மனிதன்:—“நான் ஓர் அயல்நாட்டான்; என் பெயர் மலைவிழுங்கி.”

மார்த் :—“பொருத்தமான பெயர்தான்! நீ ஏன் தூங்காமற் புரண்டுகொண் டிருக்கின்றாய்?”

மலைவிழுங்கி :—“காலையிற் சிறிது உணவு கிடைத்தது; அதனை உண்டதும் தூக்கம் வரு வதுபோலிருந்தது; படுத்தேன். ஆனால், சிறிது நேரந் தூங்குவதற்குள் பசி வந்துவிட்டது;

தூக்கம் பிடிக்கவில்லை; புரண்டுகொண்டிருக்கிறேன்.''

மார்த்:—"பாபம்? சரியான உணவில்லை போலிருக்கிறது. என்ன உணவு கிடைத்ததோ?''

மலைவிழுங்கி:—"என்ன உணவு! இரண்டு அண்டாச் சோறும், நாலைந்து மாடுகளுமே. அவை என் கடைவாய்க்குக்கூடக் காணவில்லை.''

மார்த்:—"ஓகோ! சரிதான். எனக்குச் சரியான துணைவன் நீதான். நான் கலியாணபுரத்தரசன் மகளை மணமுடிக்கப்போகின்றேன். நீ என்னுடன் வந்தால் உனக்கு ஏற்ற வேலையும் உணவுங் கொடுப்பேன்.''

மலைவிழுங்கி:—"ஓ! நல்லது; வருகிறேன்.''

மார்த்தாண்டன் மலைவிழுங்கியை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். புறப்பட்டுச் சிறிது தொலை போவதற்குள் சாலையில் ஒருவன் தன் இடக்காதைத் தரையின்மீது வைத்துக்கொண்டு எதனையோ உற்றுக்கேட்பதுபோற் படுத்திருக்கக் கண்டான்.

மார்த்:—"அடே, நீ யார்? எதை உற்றுக் கேட்கிருய்?''

அம்மனிதன்:—"நான் முறஞ்செவியன். மரங்கள் வளரும் ஒலியைக் கேட்டுக்கொண்டிருக்

கிறேன்; எழுகடலுக்கப்பாலுள்ள திட்டொன்றிற் பறவைகள் இன்னிசையுடன் பாடி யொலிப்பதை யுங் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.''

மார்த் :—"அப்படியா? கலியாணபுரம் அரண்மனையில் இப்பொழுது முத்துநகை என்ன செய்கிறாள் என்று அறிந்து சொல்ல முடியுமா?''

முறஞ்செவியன் :—"இதோ கேட்டுச் சொல் கிறேன்... ஆம்; முத்துநகை அழுதுகொண்டிருக் கிறாள். யாரோ தன்னை மணக்க விரும்பிவந்த ஓரரசன் தலையிழந்துவிட்டானும்.

மார்த் :—"சரி, நீயும் என்னுடன் வா! நல்ல வேலை கொடுக்கிறேன்.''

இதைக் கேட்ட முறஞ்செவியன் மறுமொழி கூறாமல் எழுந்து மார்த்தாண்டனைப் பின்தொடர்ந் தான். மூவரும் சிறிது தொலை நடந்து சென்றார் கள். அப்பொழுது எதிரே சாலையோரம் இரண்டு பெரிய மரங்கள் விழுந்து கிடக்கக் கண்டார்கள். அவற்றினருகே சென்று பார்த்தபோது அவை மரங்களல்லவென்றும் ஒரு மனிதனுடைய கைகளே என்றுங் கண்டார்கள். கண்டவர்கள் பெருவியப்பு எய்தியவர்களாய் அக்கைகளோர மாகவே மேனோக்கிச் சென்று பார்த்தபோது, அம் மனிதனுடைய தலையைக் கண்டார்கள்.

மார்த்தாண்டன் :—"அப்பா ! வஞ்சனையின்றி வளர்ந்திருக்கிறாயே !"

அம்மனிதன் :—"ஆம். உருவத்தில் வளர்ந்திருப்பது மட்டுமன்று ; நினைத்தால் என் கைகளை எத்துணை தொலை வேண்டுமானாலும் நீட்டவும் வல்லேன்."

மார்த் :—"அப்படியா ! உன் பெயரென்னவோ ?"

அம்மனிதன் :—"பனைமரத்தான்."

மார்த் :—"சரியான பெயர்தான் ! நீ எங்களுடன் வந்தால் உனக்கு ஏற்ற வேலை பார்த்துக் கொடுப்பேன்."

இதுகேட்ட பனைமரத்தானும் ஒப்புக்கொண்டு புறப்பட்டான். நால்வரும் கலியாணபுரம் நோக்கி விரைவாக நடந்தனர். சிறிது தூரம் சென்றபோது, எதிரில் ஒரு மனிதன் வரக் கண்டார்கள். அவன் தன்னிரு கண்களில் ஒன்றைத் துணிகொண்டு இறுக்கிக் கட்டிக்கொண்டு மற்றொரு கண்ணால் மட்டும் பார்த்தவண்ணம் வந்துகொண்டிருந்தான். அவனை மார்த்தாண்டன் யாரென்று வினவினான். "என் பெயர் பூதக்கண்ணன் ; ஒரு கண்ணைக் கட்டிக்கொண்டு பார்த்தால் தான் என்னால் அருகிலுள்ள பொருள்களைப்

பார்க்கமுடியும்; நான் கட்டியிருக்கிற கண்ணைத் திறந்தாலோ, உலகத்தில் எப்பகுதியிலுள்ள எப் பொருளையும் பார்க்கமுடியும்,'' என்று அவன் விடை பகர்ந்தான். அவனையும் உடனழைத்துக் கொண்டு மார்த்தாண்டன் மேற்சென்றான்.

வழியில், ஒருவன் போர்வைமேற் போர்வை யாக ஏழு போர்வைகளைப் போர்த்துக்கொண்டு கூனிக்குறுகி உட்கார்ந்திருந்தான். அந்த நிலையில், "ஐயையோ குளிர் நடுக்குகிறதே! பொறுக்க முடியவில்லையே!!'' என்று அவன் முணுமுணுத் துக்கொண்டுமிருந்தான். அவனைக் கண்ட மார்த் தாண்டன், "எங்களுக்கு இந்த வெயிலில் மேலே துணிபோட முடியவில்லை; சூரியன் சுட்டுப் பொசுக்குகிறான். நீ என்னவோ குளிர் பொறுக்க முடியவில்லை என்று கூறுகிறாயே!'' என்று வியப் புடன் கூறினான். "ஐயா! உங்களுக்கு வெயில் சுட்டுப் பொசுக்குவதுபோ லிருக்கலாம். எனக் கோ குளிர் பொறுக்க முடியவில்லை. என்மே லுள்ள ஏழு போர்வைகளில் ஒன்றை நீக்கி னேனானால், பனி பெய்யத் தொடங்கிவிடும்; மற் றொன்றை நீக்கினேனானால் உலகமே குளிர்ந்து விடும்; மூன்றாவது போர்வையை எடுத்தேனா னால் நீரும் உம் நண்பர்களும் குளிரில் விறைத்து விடுவீர்கள். இது கருதியே, என்னைப் பனி

பெருக்கி என்று அழைக்கின்ருர்கள் !'' என்று மறு மொழி கூறினுன் அம்மனிதன். அவனையுங் கூட அழைத்துக்கொண்டு அறுவரும் விரைந்து நடந்து மாலைப்பொழுதிற் கலியாணபுரம் சேர்ந் தனர்.

II

கலியாணபுரம் வந்துசேர்ந்த மார்த்தாண்டன் தன் நண்பர்கள் ஐவரையும் நகரெல்லையிலேயே ஓரிடத்தில் தங்கியிருக்கச் செய்தான் ; பின் சற்றுந் தாமதியாமல் அவன் நேரே அரண்மனைக்குச் சென்ருன். சென்று, அரசியைக் கண்டு, “ நான் இளவரசியை மணக்க விரும்புகிறேன் ; தாங்கள் எனக்கிடுங் கட்டளைகள் எவையாயினும் செய்து முடிப்பேன். அவை என்ன என்பதை அருள் கூர்ந்து தெரிவியுங்கள்'' என்று அவன் பணி வுடன் கூறினுன்.

அரசி :—“ ஓகோ ! பரிதிபுர இளவரசரல்ல ரோ நீர் ! வாரும் ! வாரும் !! இவ்விருக்கையில் அமரும். கட்டழகு வாய்ந்த இளங் காளையாகிய நீர், ஏன் வீணே உயிர்துறக்க விரும்புகிறீர் ? வேண்டாம், வேண்டாம். உம் தந்தை எமக்கு மிகவும் வேண்டியவர். இம் முத்துநகைக்கு மாருக அழகிற் சிறந்த வேறு பெண் ஒருத்தியை

நானே பார்த்து மணமுடித்து வைக்கிறேன். என்ன சொல்லுகிறீர் ?"

மார்த் :— அம்மணி! தாங்கள் என்னிடங் காட்டும் அளவிலா அன்பிற்கு நான் என்றென்றுங் கடமைப்பட்டுள்ளேன். ஆனாலும், முத்து நகையை மணப்பது என்பதொன்றில் மட்டும் தங்கள் அறிவுரைக்கு நான் இணங்க முடியாதிருப்பதை மன்னித்தருளுங்கள். இப்பொழுது நானிருக்கிற நிலையில் தாங்களிடப்போகுங் கட்டளைகளைத் தவிர வேறெதையும் காதிற் போட்டுக் கொள்ள முடியாதவனாயிருக்கிறேன்."

அரசி :—"ஓகோ! அப்படியானால் சரி. என் கையில் இருந்த மணிக்கணையாழி நேற்று மாலை இந்நகரருகி லோடும் ஆற்றினுள் நழுவி விழுந்து விட்டது. அதை இன்று மாலை பகலவன் மறைவதற்குள் கொண்டுவந்து சேர்ப்பிக்க வேண்டும். இன்றேல் நாளைக் காலை உம் உயிரை மேலுலகஞ் சேர்த்து விடுவேன். இதுவே என் முதற்கட்டளை; செல்லும் உடனே!"

கட்டளையைக் கேட்ட மார்த்தாண்டன் திகைத்துவிட்டான்; செய்வதின்னதென்று அவனுக்குத் தெரியவில்லை; மெல்ல எழுந்து தன் நண்பர்களிடம் வந்துசேர்ந்தான். சேர்ந்தவன், தனக்கு அரசியிட்ட கட்டளையைத் தெரிவித்தான்.

"பரந்தோடும் இப்பேராற்றில் நேற்று விழுந்த கணையாழியை இன்று மாலைக்குள் எங்கென்று தேடுவது!" என்று அவன் மேலுங் கூறிப் பெருமூச்சுவிட்டான். "இஃது ஒரு பெரிய காரியமா!" என்று கூறிய பூதக்கண்ணன் தன் கண் கட்டை அவிழ்த்துவிட்டு ஆறிருந்தபக்கம் திரும்பி உற்றுநோக்கினான். நோக்கினவன், "ஆ! அதோ ஆற்றின் நடுவிற் கிடக்கும் ஒரு சிறு கல்லின்மீது அக்கணையாழி விழுந்துள்ளது" என்றான். "என் கண்களுக்கு மட்டும் அது புலப்பட்டால்..." என்று இழுத்தாற்போற் கூறினான் பனைமரத்தான். அவ்வளவுதான்; மலைவிழுங்கி விரைந்து ஆற்றோரம் சென்று வாயைத் திறந்து ஆற்றுநீரை அடியோடு குடித்துவிட்டான். ஆற்றின நடுவே கிடந்த கணையாழி மாலைவெயிலில் பளிச்சென்று மின்னிற்று. தன் பெருங் கையை நீட்டி அதனை எடுத்து மார்த்தாண்டனிடங் கொடுத்தான் பனைமரத்தான். கணையாழி பெற்ற மார்த்தாண்டன் அரண்மனைக்கு விரைந்தோடி அதை அரசியிடஞ் சேர்த்தான். கணையாழியைக் கண்ட அரசி முதலில் திகைப்புற்றாள். எனினும், அவள் அதை வெளிக் காட்டாமல், "சரி, நீர் இன்று போய், நாளைக் காலையில் வாரும்!" என்று மார்த்தாண்டனுக்கு விடை கொடுத்தனுப்பினாள்.

அரசிக்கு இரவெல்லாம் தூக்கம் பிடிக்கவில்லை. இத்துணை எளிதாகக் கட்டளையை மார்த்தாண்டன் நிறைவேற்றி வருவானென்று அவள் நினைக்கவில்லை; ஆகவே, செயற்கரிய காரியமொன்றைச் செய்யுமாறு அவனை ஏவவேண்டும் என்று முடிவு செய்துகொண்டாள். மறுநாட்காலை மார்த்தாண்டன் வந்ததும், "அரண்மனை மாட்டுத் தொழுவத்தில் ஏறக்குறைய மூந்நூறு மாடுகள் இருக்கின்றன; அவற்றை யெல்லாம் இன்று உச்சிப்பொழுதிற்குள் நீர் விழுங்கித் தீர்த்துவிட வேண்டும்; ஒரு துண்டுகூட மீதிவிடக் கூடாது." என்று அவள் இரண்டாங் கட்டளை பிறப்பித்தாள்.

மார்த்தாண்டன்:—"ஓ! இது பெருங் கட்டளையாக இருக்கிறதே! இருந்தாலும் அக்கறையில்லை. என் நண்பர்களில் ஒருவனை நான் துணைக்கழைத்துக் கொள்ள இசைவீர்களோ?"

அரசி:—"வேண்டுமானால் ஒரேயொருவனைத் துணைக்கு வைத்துக்கொள்ளும்."

என்று அரசி கூறக்கேட்ட மார்த்தாண்டன் அகமகிழ்ந்தான்; உடனே ஓட்டமாக ஓடிவந்து, மலைவிழுங்கியைப் பார்த்து, "உனக்கு நல்ல வாய்ப்பு! வா என்னுடன்," என்று அழைத்துச் செய்தியைத் தெரிவித்தான். மலைவிழுங்கியும்

உடனே புறப்பட்டுச் சென்று, இரண்டொரு நொடியில் தொழுவத்திலுள்ள மாடுகள் யாவற்றையும் தின்றுமுடித்தான்; பின்னர், அங்கிருந்த ஆடு கோழி, வாத்து, மான், குதிரை முதலிய எல்லாவற்றையும் விழுங்கி ஒரு பெரிய ஏப்பமிட்டான்.

இதனைக் கேட்டறிந்த அரசிக்குச் சினம் மிகுந்தது; தீர ஆலோசித்து அவள் ஒரு முடிவு செய்துகொண்டாள். சற்று நேரத்தில் மார்த்தாண்டன் அவள்முன் வந்து இரண்டாவது கட்டளையை நிறைவேற்றிய செய்தி தெரிவித்தான். "சரி, நீர் கட்டளையை நிறைவேற்றி வந்ததையறிவேன்; உம் திறமையை மெச்சுகிறேன். இன்றிரவு நீர் என்னுடன் விருந்துண்ணல் வேண்டும். உண்டு முடிந்தபின் முத்துநகையுடன் நீர் நான்குநாழிகை நேரம் உரையாடல் வேண்டும். உமக்கு விருப்பந்தானா?" என்று அவள் கேட்டாள்.

மார்த்தாண்டன்:—"அதற்கு ஐயமென்ன! நானாகக் கேட்பதுபோய்த் தாங்களாக அருள் புரியும்போது வேண்டா மென்றுஞ் சொல்வேனா!"

அரசி:—"ஆனாலொன்று. உரையாடிக் கொண்டிருக்கையில் தப்பித்தவறித் தாம் தூங்கி விடக்கூடாது. தூங்கிவிட்டால் நான் முத்து நகையை அழைத்துச் சென்று விடுவேன். சென்ற

பின், குறித்த நான்கு நாழிகை நேரங்கழித்து நான் திரும்பிவந்து பார்ப்பேன். அவ்வாறு பார்க்கும் போது தம்முடன் முத்துநகை இல்லாதிருந்தால் அத்துடன் உம் பாடு முடிந்தது!"

மார்த்:—"என்ன தூங்குவதா? நான் மணம் முடித்துச் செல்லும்வரை தூங்குவதாக இல்லை."

அரசி:—"சரி அப்படியானால் இரவு எட்டு நாழிகைக்குச் சரியாக அரண்மனைக்கு வாரும்!"

மட்டுக்கடங்கா மகிழ்ச்சிகொண்ட மார்த்தாண்டன் உடனே புறப்பட்டுத் தன் நண்பர்களிடம் சென்றான்; சென்று, நிகழ்ந்தவற்றை அவன் உரைத்து, இரவு அவர்கள் யாவரும் அரண்மனைக் கருகில் வந்து காத்திருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். இரவிற் குறிப்பிட்ட வேளை வந்ததும் மார்த்தாண்டன் சிறக்க உடுத்திக்கொண்டு அரண்மனை சேர்ந்தான். விருந்தறையில் உணவுவகைகள் நிறையப் பரிமாறப்பட்டிருந்தன. குடிநீர் வகைகளுங் கணக்கற்றனவாய்க் காணப்பட்டன. அரசியுடன் அமர்ந்து உணவுண்டான் மார்த்தாண்டன்; பேசிக்கொண்டே, அரசியால் மயக்கந்தரு மருந்தொன்று கலந்து கொடுக்கப்பட்ட ஒரு குவளை நீரையும் அவன் குடித்துவிட்டான்.

உண்டு முடிந்தவுடன், அரசி அவனை இள வரசியின் அறைக்கு அழைத்துச் சென்ருள். அவ் வறை அரண்மனையின் மேன்மாடியி லிருந்தது. அவ்வறைக்கு ஒரே யொரு சாளரந்தான். அதைத் திறந்தால் கண்ணிற்கு எட்டினமட்டும் ஒரே நீர்ப் பரப்பாகத்தான் காணப்படும். ஆற்றேரத்தில் அவ்வறை கட்டப்பட் டிருந்ததுபோலும்! அவ் வறையின் நடுவே, அழகிய இருக்கையொன்றில் முத்துநகை களி துளும்பும் மதிமுகத்துடன் அமர்ந்திருந்தாள். இன்பக்கடலில் அமிழ்ந்தவ ஞய், மார்த்தாண்டன் அவளெதிரே யிருந்த இருக் கையொன்றில் அமர்ந்து உரையாடிக் கொண் டிருந்தான். அரசியும் வெளியே சென்ருள். சற்று நேரத்தில் மார்த்தாண்டனுக்கு அவனையும் அறியாமல் தூக்கம் வந்தது. அவன் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. இருந்த இருப்பி லேயே அவன் அயர்ந்துவிட்டான். மயக்க மருந்து தன் வேலையைச் செய்துவிட்டது!

ஒரு நாழிகை கழித்து அவன் கண்ணைத் திறந்து பார்த்தான்; முத்துநகையைக் காண வில்லை. அரசியிட்ட கட்டளை நினைவிற்கு வந் தது. சட்டென்றெழுந்து சாளரத்தருகே யோடி எட்டிப் பார்த்தான். பால்போல் நிலவு ஒளிவீசிக் கொண்டிருந்தது; அந்நிலவில் எதிர்க்கரையில்

மார்த்தாண்டனும் முத்துநகையும் உரையாடல்

மலைவிழுங்கியும் முறஞ்செவியனும் உட்கார்ந் திருந்தது இவனுக்கு நன்ருகத் தெரிந்தது. கையைத் தட்டி, "இளவரசி ஓடிவிட்டாள்; இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதில் அவளை மீண்டுங் கொண்டுவராவிட்டால் நான் ஒழிந்தேன்." என்று அவன் உரக்கக் கூவினன். மலைவிழுங்கி உடனே பனைமரத்தானைக் கூப்பிட்டு, இளவரசன் இருக்குமிடத்தைக் காட்டினன். அவன் ஒரே எட்டாக எட்டி இளவரசனைத் தூக்கி மலைவிழுங்கி இருந்தவிடத்திற் கொண்டுவந்து சேர்த்தான். மார்த்தாண்டன் முறஞ்செவியனை நோக்கி, "முத்துநகை இப்போதிருக்குமிடத்தை உன்ஞல் அறிந்து சொல்லமுடியுமா?" என்று கேட்டான். அவனும் இடக் காதைத் தரைமீது வைத்துச் சற்றுநேரம் உற்றுக் கேட்டான்; கேட்டபின், "ஆம் இவ்வூருக்கருகிலுள்ள கடல் நடுவில் ஒரு திட்டு இருக்கிறது; அத்திட்டின் நடுவில் காலங்கண்ட மரமொன்று இருக்கிறது. அதன் நடுவே இருக்கும் மரப்பொந்தில் இளவரசி உட்கார்ந்திருக்கிருள். 'மார்த்தாண்டரே! நான் இங்கிருக்கிறேன். என்னைக் காப்பாற்றும்' என்று அழுதுகொண் டிருக்கிருள்" என்ருன். உடனே, பூதக்கண்ணன் மூடியிருந்த கண்ணைத் திறந்து, "அவளிருக்குமிடம் நன்ருகத் தெரிகிறது. ஆனலும் இவ்ஆற்றையும், கடலையும் கடக்கக் கப்ப

லின்றி நாம் என்ன செய்வது?" என்ருன். அதுகேட்ட பனிபெருக்கி தன் போர்வைகளில் இரண்டு மூன்றை விலக்கினுன். ஒரு நொடியில் ஆறுங் கடலும் பனியால் மூடப்பட்டு உறைந்து விட்டது. மார்த்தாண்டன் விரைந்தோடி இளவரசியை அழைத்து வந்தான். உடனே, பனைமரத்தான் இளவரசியையும் இளவரசனையும் தூக்கி மேன்மாடி அறையில் விட்டான். அறைக் கதவுந் திறந்தது; அரசி உள்ளே வந்தாள். வந்தவள் இருவரும் இருக்கக் கண்டதும் திடுக்கிட்டாள். இருந்தாலும் தன் ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல், "இளவரசரே! நீரன்ருே வீரர்! இனி நீர் இவ்வேளைக்குமேல் எங்கே செல்லப் போகிறீர்? உம் நண்பர்களையும் இங்கே வரவழைத்துப் படுத்துக்கொள்ளச் சொல்லும். உங்கட்கெனத் தனியறை யொன்று ஒழித்துவிடச் செய்திருக்கிறேன்." என்று சொல்லி, முத்துநகையை அழைத்துச் சென்ருள்.

மார்த்தாண்டனும் தன் நண்பர்களை அரண்மனைக்குள் வரச்செய்து, அவர்களோடு தானும் அரசி குறிப்பிட்ட அறையிற் சென்று படுத்துக் கொண்டான். அவ்வறை இரும்புத் தகட்டினுற் சமைக்கப்பட்டதொன்று. இதைக் கண்ட மார்த்தாண்டன் எதற்காக இவ்வறையிற் படுக்கச் செய்

தாள் அரசி யென்று ஆழ்ந்து நினைத்துப்பார்த்தான். இதற்குள் அறை முழுதும் வெப்பம் மிகுந்து வந்தது. சுவர்த்தகடுகளும், நிலத்தகடும் சூடுமிகுந்தன. மார்த்தாண்டன் எழுந்தோடிக் கதவுவழியாகப் பார்த்தான். வெளியில் அரசி நின்றுகொண்டிருந்தாள்; அவ்வறையின் நாற்புறங்களிலும் கட்டைகள் அடுக்கித் தீமூட்டப்பட்டிருந்தன. அரசியின் சூழ்ச்சியை யுணர்ந்துகொண்டான் மார்த்தாண்டன்; விரைந்தோடி, பனிபெருக்கியின் மீதிருந்த போர்வைகளில் இரண்டை நீக்கிவிட்டான். உடனே அறை மீண்டுங் குளிர்ந்துவிட்டது.

இருப்பறைக்குள் சூட்டினால் அறுவரும் வெந்துபோ யிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டே அரசி வந்து கதவைத் திறந்தாள். “அம்மணி! நானும் என் நண்பர்களும் சாக வில்லை; உயிருடன்தான் இருக்கிறோம். உம்முடைய மூன்று கட்டளைகளையும் நிறைவேற்றி வைத்த என்னை நீர் இவ்வாறு சூழ்ச்சி செய்து கொல்ல நினைக்கலாமா? எனக்கு வருங் கோபத்தில் உம்மை இப்பொழுதே கொன்றுவிடுவேன். ஆயினும் நீர் ஒரு பெண்பிள்ளையாயிற்றே என்று மன்னிக்கிறேன். உடனே இவ்வூரை விட்டு ஓடி விடும்! இஃது என் கட்டளை,” என்றான் மார்த்தாண்டன். அரசியும் மறுமொழி கூறாது, உடனே

நகரைவிட்டு நீங்கினுள். முத்துநகைக்கும் மார்த்தாண்டனுக்கும் சிறப்பாக மணம் நடைபெற்றது. மார்த்தாண்டன் கலியாணபுர அரசனுனன். அவன் நண்பர்கள் அவனுக்கு மந்திரிகளாக இருந்து பேருதவி புரிந்துவந்தார்கள்.

௨. பேராசை பெருங்கேடு

சோணையூரில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவ்வூரிற் குடியிருந்த நூறு நூற்றைம்பது குடியானவர்களுள் அவனே மிக்க ஏழை. அதனால், அவனை அவ்வூரார் ஏளனமாக நடத்திவந்தார்கள். ஏழையென்றால் *மோழையும் பாயுமன்றோ? மேலும் அவனுடைய முன்பற்களில் ஒன்று ஒரு சாண் வெளியே நீண்டு வந்திருந்தது. கேட்பானேன்! அவ்வூரிலுள்ள பெரியவர்கள் முதல் சிறுபிள்ளைகள்வரை யாவரும் அவனை ஏளனம் பண்ணி வந்தார்கள்.

ஆயினும், ஏழையாயிருந்த சாண்பல்லனைப் பழித்துவந்த அளவிற்கு, அவன் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் வசித்துவந்த முழம்பல்லனை அவ்வூரார் இகழ்வதில்லை. பல்லளவு மிகுதியாய் இருந்ததால், அவனை அவ்வாறு இகழாமல் அவர்கள் விட்டுவிட்டதாக எண்ணிவிடக் கூடாது. பல் முழநீள மிருந்தாலும், அவன் சிறிது செல்வமுடையவனு யிருந்தான். பணம் பாதாளமட்டும் பாயுமன்றோ? மேலும், முழம்பல்லன் சினமிகுந்தவன்; சினமுண்டாக்கப்பட்டால், அகப்பட்டவர்களைப் பல்லாலேயே கரண்டிக் கொன்றுவிடக்

---

* மோழை - மொட்டை மாடு.

கூடிய முரடன். ஆகவே, அவன் பேச்சிற்கு யாரும் போவதில்லை.

வாயிளைத்த சாண்பல்லனின் மனைவிக்கோ இந்நிலைமை பொறுக்கக்கூடாத துன்பமாக இருந்தது. அவள் நெடுநாளாய் இதனை எண்ணி யெண்ணி ஏங்கினள். ஒருநாள் இரவு சட்டென்று அவளுக்கு ஒரு நினைவெழுந்தது. அவ்வூருக்கு அருகிலுள்ள மலைக்குகை யொன்றில் யாரோ பெரியார் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் அரிய பல காரியங்களைச் செய்து முடிக்க வல்லவ ரென்றும் அவள் கேள்விப்பட்டிருந்தாள். ஆக வே, தன் கணவனை அவரிடம் அனுப்பிச் சாண் பல்லைப் போக்கிச் சரியான பல்லை ஏன் பெறச் செய்யலாகாதென்று நினைத்தாள். உடனே அவள் வீட்டிலிருந்த புளித்த மோரையும், பழஞ் சோற்றையும் பிசைந்து கட்டுச்சோறு கட்டினள்; பொழுது விடிந்ததும், அதை அவள் தன் கணவனிடங் கொடுத்துத் தன் கருத்தையும் விளக்கிக் கூறி அவனை வழியனுப்பினள்.

சாண்பல்லனுந் தடையொன்றுங் கூறாமல் சோற்று மூட்டையைத் தோளிற் போட்டுக் கொண்டு புறப்பட்டான்; நடையாக நடந்து, உச்சிப்பொழுதிற் குறிப்பிட்ட மலைக்குகையை அடைந்தான். அடைந்தவன் குகையினுள் எட்

டிப் பார்க்கவே, தான் நாடிவந்த பெரியார் கடவுளை எண்ணியபடியே கண்களை மூடி மோன நிலையி லிருக்கக்கண்டான்: ஆகவே, அச்சமயம் அவருடன் பேசுவது தவறு என்று நினைத்து, குகைக்கெதிரிலுள்ள மரத்துநிழலிற் போய் நின்ருன். நடந்த நடையால் அவனுக்கு மிகுந்த களைப்பு உண்டாயிருந்தது. எனவே, சோற்றுப் பொதியை மரக்கிளை யொன்றிற் கட்டிவிட்டு, அதற்கு நேராகக் கீழே அவன் படுத்துக்கொண்டான். படுத்தவன் விரைவில் அயர்ந்து உறங்கி விட்டான்.

உச்சிப்பொழு தானவுடன், வழக்கம்போல் எல்லாம் வல்ல சித்தரான அப்பெரியார் வெளியில் வந்தார்; மரத்தடியில் ஒருவன் படுத்திருப்பதை அவர் கண்டார். அவன் வாயிலிருந்து வெள்ளையாய் ஒரு சாண் அளவிற்கு ஏதோ ஒருபொருள் நீண்டிருந்தது. அது கைகாட்டிமரத்துக்கையைப் போன்று, மேலே மரக்கிளையிற் கட்டியிருந்த சோற்று மூட்டையைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருந்ததை அவர் கண்டார். கண்டவர், அவன் ஏன் வந்தான் என்பதை, "ஞான திருஷ்டி"யால், ஆராய்ந்தார். உண்மை புலப்படவே, சாண்பல்லை நீக்கி அவர் சரியான பல் உண்டாகச் செய்தார். பின், சோற்று மூட்டையை அவிழ்த்தெடுத்து,

அதிலுள்ள சோற்றை அவர் குளத்திற் கொட்டி விட்டார்; பிறகு, சிறு கண்ணடி யொன்றையும், மரச்சிமி ழொன்றையும் அம்மூட்டைக்குள் வைத்துக் கட்டிவிட்டு அவர் குகைக்குட் போய்விட்டார்.



சித்தர் "ஞான திருஷ்டி"யால் ஆராய்ந்தார்.

நெடுநேரம் தூங்கிக்கிடந்த சாண்பல்லன் பின் மெதுவாக எழுந்து சாப்பிட உட்கார்ந்து மூட்டையை அவிழ்த்தான்; மூட்டையினுள்ளே சோற்றுக்கு மாருகக் கண்ணடியும் சிமிழும் இருக்கக் கண்டான். கண்டவன், "ஐயோ, பாவம்!

நம்மைவிடப் பசி மிகுதியாக இருந்தவர்கள் சோற்றைச் சாப்பிட்டுவிட்டார்கள்போலிருக்கிறது! போனால் போகட்டும்,'' என்று தன் வாயோடு சொல்லிக்கொண்டான்; சொல்லிவிட்டுக் கண்ணாடியை எடுத்து, அதில் தன் முகத்தைப் பார்த்தான். பார்த்ததுதான்; அவன் பசியெல்லாம் பறந்துவிட்டது. ஏன்! சாண்பல்லைக் காணவில்லை. அஃதிருந்த விடத்திற் சரியான பல்லொன்று வளர்ந்திருந்தது. மகிழ்ச்சி மிக்கவனாய் அவன் சிமிழைத் திறந்தான். அழகான சிறுமி யொருத்தி அச் சிமிழிலிருந்து வெளியே வந்தாள்; வந்து அவன்முன் ஓரிலை போட்டு, இலை நிறையப் பல வகை உணவுகளைப் பரிமாறினாள். அதைக் கண்ட அவன் சற்றுநேரம் திகைத்துவிட்டான். பின் ஒருவாறு தெளிந்து, அவன், "அம்மா நீ யார்?" என்று அடக்கமாகக் கேட்டான்.

உடனே, அச்சிறுமி, "ஐயா! நான் அந்தச் சிமிழுக்குள் இருக்கும் தெய்வ மாதர்களில் ஒருத்தி. சிமிழைத் திறக்கும்போதெல்லாம் திறக்குமிடத்தில் இருக்கும் எல்லோருக்கும் வயிறார உணவு படைத்துப் பரிமாற வேண்டியது எங்கள் வேலை. சிமிழைத் திறக்கும்போதே நீர் ஒருவர்தாம் இங்கு இருக்கிறீர் என்பது எங்களுக்குத் தெரியும்; ஆதலால், நான் மட்டும் வந்தேன்.

ஆயிரம் பேரிருந்தால், அதற்கேற்ற தொகையினர் வருவோம். நூறுயிரம் பேர் இருந்தாலும் அதற் கேற்ற தொகையினராக நாங்கள் வந்து பரிமாறு வோம். எந்தச் சமயத்தில் எத்தனை பேரிருந்தா லும் சரியே; அவர்களுக்கெல்லாம் ஒன்றுங் குறைவில்லாமல் நாங்கள் உணவுபடைத்தல் வேண்டுமென்பது இக் குகையிலுள்ள சித்தர் கட்டளை," என்று இனிய குரலிற் கூறிவிட்டுச் சிமிழுக்குள் மறைந்தாள்.

பல்லன் அகமிக மகிழ்ந்தான்; விரைவில் இலையிலிருந்தவற்றை உண்டு முடித்தான்; சிமிழை யும் கண்ணாடியையும் மூட்டையுள் வைத்துக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். புறப்பட்டவன் ஓட்டமும் நடையுமாக ஓடி வீடு வந்து சேர்ந்தான்.

வீடு சேர்ந்ததும், அவன் நிகழ்ந்தவற்றை யெல்லாம் தன் மனைவியிடம் விரித்துக் கூறினான். அதுகேட்ட அவள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. மறுநாட் காலையில் கணவனும் மனைவியும் நீராடிப் பட்டுடுத்திக் கொண்டார்கள்; இருவரும் வீடுவீடாய்ச் சென்று தங்கள் வீட் டுக்கு விருந்துக்கு வரும்படி அவ்வூராரை அழைத் தார்கள். அவ்வூர் மக்கள் சாண்பல் சரிப்பட்டதைக் கண்டு பல்லனை வியந்து பாராட்டினார்கள்; பின் னர் அழைப்பிற் கிணங்கி யாவரும் அவன் வீடு

வந்து சேர்ந்தார்கள். முழம்பல்லனும் அவன் மனைவியுங்கூட அவ்விருந்துக்கு வியப்புடன் வந்திருந்தார்கள்.

வந்தவர்களைப் பல்லன் வரிசையாக உட்கார வைத்துவிட்டு, ஓரறைக்குட் சென்றான்; சிமிழை எடுத்துச் சித்தரைத்துதித்துத் திறந்தான். உடனே மணவீட்டுக்கு வரிசை எடுத்து வருபவரைப்போல அழகிய பெண்கள் பலர் வெளியே வந்தார்கள்; அங்குள்ள எல்லோர்க்கும் அவர்கள் இலை போட்டுப் பலவகை உணவுகளைப் பரிமாறினார்கள். விருந்தினர் யாவரும் மிகுந்த வியப்புடன் வயிரார உண்டு, பல்லனை வாயார வாழ்த்திச் சென்றார்கள்.

முழம்பல்லனுக்கு மட்டும் அன்றிரவு உறக்கம் பிடிக்கவில்லை. சாண்பல் போன வகையைக் கேட்டறிந்துகொண்டு தன் முழம்பல்லை ஏன் சரிசெய்து கொள்ளக் கூடாது? முடியுமானால், பல்லனிடமுள்ள சிமிழையும் ஏன் தான் கவர்ந்து கொள்ளக்கூடாது? என்று அவன் கருதினான். கருதியவன் அதுவே சரியென்ற முடிவிற்கு வந்தான். எனவே, பொழுது புலர்ந்ததும், அவன் பல்லனிடம் வந்தான்; வந்து, சாண்பல் போய்ச் சரியான பல் வந்தது எப்படி என்று கேட்டான். சூதொன்றுமறியாத பல்லன் நிகழ்ந்த செய்திகளை நிகழ்ந்தவாறே சொன்னான். அதைக் கேட்ட

முழம்பல்லன் உடனே, வீட்டுக்கு வந்து, கட்டுச் சோறு கட்டிக்கொண்டு புறப்பட்டு மலைக்குகையை அடைந்தான்.

அடைந்தவன், சோற்று மூட்டையை மரக் கிளையிற் கட்டிவிட்டு மரத்தடியிற் படுத்துக்கொண்டான். ஆனால், அவனுக்குத் தூக்கம் வரவில்லை. விழித்தபடியே அவன் படுத்திருந்தான். உச்சிப் பொழுதில் வழக்கம்போற் சித்தர் குகையை விட்டு வெளியே வந்தார். வரவே, முழம்பல்லன், "சாமி! சாமி! இதோ நான் படுத்திருக்கிறேன். என் முழம்பல்லை எடுத்து நேற்று வந்த பயலுக்கு ஒட்டவைத்துவிடுங்கள். அவனிடமிருக்கும் சிமிழையும் எனக்கு வாங்கிக்கொடுங்கள்," என்று பேராசையும், பொறாமையும் தோன்ற வேண்டிக் கொண்டான். சித்தர், "உனக்கு வேண்டியதைச் செய்துவிட்டேன்," என்று கூறிக் குகைக்குள் சென்றுவிட்டார்.

முழம்பல்லன், "ஆகா! போய்விட்டாரே!" என்று வருந்திக் குகைக்குள் ஓடினான்; ஓடியும் யாது பயன்! சித்தரைக் கண்டிலன். எனவே, அவன் வெளியில் வந்து, மரத்தின் கிளையிலிருந்த சோற்று மூட்டையை அவிழ்த்துப் பிரித்தான். அதில், சோற்றுக்கு மாறாக ஒரு கண்ணாடியும் ஒரு சிமிழும் இருக்கக் கண்டான். கண்ணாடியில்,

அவன் தன் முகத்தைப் பார்த்தான். பார்த்தவன் திடுக்கிட்டுப் போனன். ஏன்? முன் ஒரு முழ மிருந்த பல்லுடன், வேறு சாண்பல் ஒன்று வந்து ஒட்டிக்கொண்டு இரண்டுஞ் சேர்ந்து ஒன்றரை முழம் நீண்டிருந்தன. "கறுப்பன் பெரிய கறுப்பன் ஆன கதைபோல் ஆயிற்றே," என்று அவன் மனம் வருந்தினன்; இருந்தாலும், எதிரே இருந்த சிமிழைக் கண்டதும், ஒருவாறு மனந் தேறி விரைந்து வீடு திரும்பினன்.

அவன் மனைவி ஒன்றரைமுழப் பல்லைக் கண்டு, "இஃதென்ன வெட்கக் கேடு?" என்று வினவினள். அவன் அவளுடைய வினவைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே, "நாளைக்கு ஊரார் எல்லோர்க்கும் நம் வீட்டில் விருந்து என்று சொல்லி வா!" என்ருன். அவளும் அப்படியே சென்று எல்லோர்க்கும் விருந்திற்குச் சொல்லி வந்தாள். மறுநாள் பகற்போதில் ஊரார் எல்லோரும் முழம்பல்லன் வீட்டில் வந்து வரிசையாய் உட்கார்ந்து, விருந்துச் சாப்பாட்டை எதிர் பார்த்தார்கள். முழம்பல்லனுந் தனியறை ஒன்றிற் சென்று சிமிழினைத் திறந்தான். அதற்குள்ளிருந்து அம்பட்டர் பலர் புலபுலென வெளியே வந்தார்கள்; வந்து, அங்கிருந்த எல்லோருடைய தலைகளையும் மொட்டை யடித்துவிட்டார்கள்.

முழம்பல்லனும், அவன் மனைவியுங்கூட மொட்டை யடிக்கப்பட்டார்கள். பேராசைக் கேற்ற பயனைப் பெற்றான் முழம்பல்லன்.



௩. மதிவதனன்

I

மும்மணி கொழிக்குங் கோட்டை வள நாட்டை முன்னொருகால் கேரளவர்மன் என்ற மன்னனொருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு நெடுநாட் பிள்ளையில்லாமலிருந்து வந்து இறுதியில் ஆண்மகவொன்று பிறந்தது. தண்கதிர் வீசும் வெண்மதிபோன்ற முகத்தையுடைய அக் குழந்தைக்கு மதிவதனன் என்று பெயரிடப்பட்டது. மதிவதனன் பிறந்த நேரம் நல்ல நேரமன்றுபோலும்! அவன் பிறந்த மறு ஆண்டில், கேரளவர்மனுக்குக் கப்பங் கட்டிக் கொண்டுவந்த குறுநில மன்னன் ஒருவன், திடீரெனப் படையெடுத்து வந்தான்; வந்து கடும்போர் செய்து கேரளவர்மனைக் கொன்று, கோட்டை வளநாட்டையுங் கைப்பற்றிக் கொண்டான். போரில் அரசன் மாண்டது கேட்ட அரசியும் நொடிப்பொழுதுந் தாழாமல் உயிர் நீத்தாள். எனவே, பெற்ற தாய்தந்தையரையும் இழந்து, உற்ற தன் அரசுரிமையையும் ஒருங்கே பறிகொடுத்தான் மதிவதனன். ஓராண்டும் நிறையாத அவனை அவன் செவிலித்தாய் தூக்கிக்கொண்டு ஒருவருமறியாமற் கோட்டை வளநாட்டை விட்டு வெளியேறினாள்.

வெளியேறின அவள் பலநாட்கள் நடையாக நடந்துவந்து நடுநாடு அடைந்தாள்; இனி, குழந்தைக்கு எதிரியரசனால் எத்தகைய கெடுதியும் நேரிடாதென்று கருதினாள்; ஆகவே, நடுநாட்டுத் தலைநகராகிய கோவிலூர் சேர்ந்து அங்குத் தட்டுப் பிச்சை எடுத்து வயிறு வளர்த்துவந்தாள்; மாசு படிந்த மாணிக்கம்போல மதிவதனனும் அவளிடம் வளர்ந்துவந்தான்.

இன்னும் மதிவதனன் காலம் நற்காலமாக வில்லை போலும்! அவனுக்கு மூன்றுவதாண்டு முடியுந் தருவாயில், அவனை வளர்த்துவந்த செவிலியும் மாரடைப்புக் கண்டு திடீரென மாய்ந்தாள். அதுகண்டு அழுதரற்றி நின்ற மதிவதனனைக் கோவிலூரிலிருந்த கூலவாணிக னொருவன் தன்னில்லம் அழைத்துச் சென்று, தன் பிள்ளையைப்போலவே வளர்த்து வந்தான். மதிவதனனும் உரியகாலத்திற் பள்ளிக்குச் சென்று நன்கு கல்வி பயின்றுவந்தான்; வந்ததுடன் நல்லொழுக்கமும் நற்பண்பும் நிறைந்தவனாயுந் திகழ்ந்துவந்தான். அவனுக்கு வயதும் பன்னிரண்டாயிற்று. இது நிற்க.

கோவிலூர்க் காவலன் கோலாகலன் என்னும் பெயருடையான். அவனுக்குக் குமுதினி என்றொரு பெண்ணிருந்தாள். அமைதியையே

விரும்பும் இயல்பினன் அம்மன்னன்; சிக்கல்கள் பல நிறைந்துள்ள அரசியல் முறையில் ஈடுபட உள்ளமியையாதவன்; கடவுட்பற்று மிகுந்தவன். எனவே, ஆட்சிமுறை அவனுடைய முதலமைச்சனாக இருந்துவந்த குமரகண்டனின் விருப்பம் போலவே நடைபெற்று வருவதாயிற்று.

வஞ்சகமே உருவாயமைந்த குமரகண்டன் சூழ்ச்சியில் இணையற்றவன். பேராசை பிடித்த இக்கொடியோனுக்கு நம்பி என்றும், நங்கை யென்றும் ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகளிருந்தனர். தன் மகனை நம்பிக்கு எப்படியாவது அரசன்மகளான குமுதினியை மணம் முடித்து விடவேண்டும்; முடித்தால், நடுநாட்டரசுரிமை தன் கைவசமாகும் என்ற எண்ணம் குமரகண்டன் நெஞ்சில் நெடுநாளாகக் குடிபுகுந்திருந்தது. இருந்தாலும் நாட்டுமக்களின் நல்லாதரவில்லாவிட்டால் சூழ்ச்சியால் கைப்பற்றப்படும் ஒரு நாடு நெடுநாள் தன்கையில் நில்லாதென்பதை அவன் அறிவான்; ஆதலால், அவன் வலிய நடுநாட்டு மக்கட்கு நன்மைகள் பல புரிந்துவருவானாயினன்.

இக் கருத்துக்கொண்டே அவன் அடிக்கடி கோவிலூர்க் குடிமக்கட்கு நல்விருந் தளிப்பது வழக்கம். அவ்வாறு அளிக்கும் விருந்தில் ஊரார் யாவரும் வேறுபாடின்றிக் கலந்து கொள்ளுமாறு

அவன் ஏற்பாடு செய்திருந்தான். இம்முறைப்படி அவன் அளித்த விருந்தொன்றிற்கு, ஒருநாள் மதிவதனனும் தன் தோழர்களுடன் வந்திருந்தான்.

அச்சமயம், அங்கு சாஸ்திரியார் ஒருவரும் வந்திருந்தார். "சாமுத்திரிகம்" என்னும் உடலுறுப்பிலக்கணங் கற்றுத் தேர்ந்திருந்த அவர் மதிவதனனை வியப்புடன் உற்றுநோக்கினர். நோக்கிய அவர் தன்னுடன் வந்திருந்த நண்பரொருவரை விளித்து, "முகத்தில் அரசகளை பொலிகின்றதே! இச்சிறுவனின் முகஅமைப்பைப் பார்த்தால் இவனே இந் நடுநாட்டை அரசாள்வான் என்று தெரிகிறது. ஏன்! இந் நடுநாடு மட்டுமேயன்றி எட்டினமட்டுங் கட்டித் தனியரசு புரிவான் என்பதற்கும் ஐயமில்லை. இச்சிறுவனின் உருவம் என் கண்களைவிட் டகலாதுபோ லன்றோ தோன்றுகிறது!" என்று கூறினர். இவ்வாறு இவர் கூறிய சொற்கள் அச்சமயம் அவ்விடம் வந்த குமரகண்டன் செவிகளிலும் வீழ்ந்தன. திடுக்கிட்டான் கொடியோன்! எங்கே தன் முயற்சியெல்லாம் விழலுக்கிறைத்த நீராகி விடுமோ என்று அஞ்சினன். அன்றிரவு முழுதும் அவனுக்கு உறக்கமே பிடிக்கவில்லை. எண்ணுதனவெல்லாம் எண்ணினன்; எண்ணி யொரு முடிவிற்கு வந்தான்; பொழுது புலர்ந்ததும் மதிவதனன் இருக்குமிடத்தைத் தேடி அவனை

யழைத்துவருமாறு தன் ஏவலாளர்கட்குக் கட்டளை யிட்டான். அவர்களும் அவ்வாறே சென்று அவனை யழைத்து வந்தனர். "தம்பீ! நீ என் வீட்டிலேயே சிலநாள் தங்கியிரு. ஏதோ உன்னைக் கண்டதும் உன்மீது எனக்கு அன்பு சுரக்கின்றது. என் மகன் நம்பிக்குத் தோழனாக நீ இருந்துவா!" என்று பையனிடங் கூறினான் குமரகண்டன். அதற்கிசைந்து மதிவதனனும் உட்சென்றான்.

மூன்று நாட்கள் கழிந்தன. நான்காம் நாளிரவு குமரகண்டன் கொலைஞர்கள் இருவரைக் கூப்பிட்டான். அவர்கள் வந்ததும், அவர்களை நோக்கி, "அடே! உங்கள் தலைகள் உங்கள் உடலில் தங்கவேண்டுமானால், மறுமாற்றம் ஒன்றுங் கூறாமல், நாளைக்காலை நம் வீட்டிலிருக்கும் மதிவதனன் என்னுஞ் சிறுவனை, ஒருவருமறியாமல் நடுக்காட்டிற்கு அழைத்துச் சென்று, அவனைக் கொன்று எனக்கு அடையாளங் கொண்டுவந்து காட்டவேண்டும், எச்சரிக்கை!" என்று கடுமையாக மொழிந்தான் இரக்கமிலான். "அப்படியே" என்று கூறி அவ்விருவரும் விடை பெற்றுச் சென்றனர்.

மறுநாட் காலை மதிவதனனை யழைத்துக் கொண்டு கொலைஞரிருவரும் நடுக்காட்டையடைந்தனர். சட்டென்று அவர்களில் ஒருவன்

மதிவதனனைக் கீழே தள்ளி அவனை வெட்டத் தன் கையிலிருந்த வாளை ஓங்கினான். அதைக் கண்டு அலறித்துடித்த மதிவதனன் விரைந்து அக் கொலைஞனின் கால்களிரண்டையும் பற்றிக் கொண்டான். "ஐயனே! நான் என்ன தவறிழைத் தேன்! உங்களை இன்றைரென்றுகூட நான் அறிந் திலனே! கருணை பொழியும் உள்ளத்தர்களாகிய நீங்கள் இக் கொடுஞ்செயலைப் புரிவீர்கள் என்று யாராவது கூறினாலும் நான் நம்புவேனோ? தந்தையற்ற எனக்குத் தந்தைபோல் விளங்குந் தாங்களோ என்னைக் கொலைபுரியப் போகிறீர்கள்! உங்களுக்கு என்னைப்போற் பிள்ளைகள் இருக் கலாம். அப்பிள்ளைகளோடு ஒருவனாய் என்னையுஞ் சேர்த்துக்கொள்ளுங்கள்!" என்று சிறுவன் கல் லுங் கரையும்வண்ணம் இறைஞ்சி மன்றாடினான். கொலைஞர்களின் உள்ளமுங் குழைந்தது. இரக் கம் மிகுந்தவர்களாய் அவர்கள் அவனை உற்று நோக்கினார்கள்; நோக்கினவர்கள் அவன் வலக்கை யில் ஆறு விரல்கள் இருக்கக் கண்டு தங்களுக்குள் ஏதோ மெல்லிய குரலிற் பேசிக்கொண்டார்கள். பின் ஒருவன் மதிவதனனை நோக்கி, "தம்பீ, உன்னைக் கொல்ல எங்களுக்கு மனம் வரவில்லை. நாங்கள் கொலைஞர்களாயினுங் கொடியர்களல்லர். ஆனாலும் எங்கள் வயிற்றுப் பிழைப்பு இத்தகைய இழிதொழிலில் எங்களைக் கொண்டுவந்து வைத்



மதிவதனன் கொலைஞரிடம் மன்றாடுதல்

துள்ளது. தம்பி! உன்னை விட்டுவிடுகிறோம்! ஆனால், நீ கோவிலூர்ப்பக்கம் திரும்பி வரும் எண்ணத்தை அடியோடு விட்டுவிடவேண்டும். நீ இன்னானென்றும், எப்படித் தப்பினாயென்றும் ஒருவருக்குங் கூறக் கூடாது. தெரியுமா? இக்காட்டினூடே சென்று வேறெந்த நாட்டையாவது அடைந்து நீ வாழ்ந்திரு!" என்று கூறினான். கூறியவன், சட்டெனக் குனிந்து தன் கைவாளால் மதிவதனனின் வலக்கையிலிருந்த ஆறாவது விரலை வெட்டி யெடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான்; மற்றைக் கொலைஞனும் அவனைப் பின்தொடர்ந்தான். விரல் வெட்டப் பட்டதனாலுண்டான வலி தாங்கமாட்டாமல் மதிவதனன் வீறிட்டலறித் தரையில் வீழ்ந்தான்.

அச்சமயம், அக்காட்டிற்கு வேட்டைக்கு வந்திருந்த குமரகோட்டத்துக் குறுநிலமன்னன் அவ்வழியே வந்தான். வந்தவன், நிலத்திற்கிடந்த சிறுவனைக் கண்டு, பரிந்து தூக்கினான்; தூக்கி, அவன் கையில் வடிந்த குருதியைத் துடைத்துத் துணிகொண்டு கட்டச்செய்து, அவனைத் தன்னுடன் தன் தலைநகராகிய குமரபுரிக்கு அழைத்துச் சென்றான்.

II

குமரபுரி சேர்ந்த குணசீலன் சிறுவனைத் தன் மனைவியிடம் சேர்த்தான்; பிள்ளைப் பேறில்லாப்

பெருங்குறையைத் தீர்க்க வந்துள்ளான் இவ்வி ளஞ்சூரியன்; ஆகையால், இவனை மிகவும் கருத் துடன் பார்த்து வரவேண்டுமென்று அவளிடங் கூறினான். அவன் மனைவியும் அவ்வாறே சிறு வனைக் கண்ணெனக் காத்துவந்தாள். அரசியல் முறைக்கு ஏற்ற பயிற்சிகளில் இரண்டொன்று முன் பயிலாதிருந்தவற்றையும் மதிவதனன் இங்கேயே பயின்று கொண்டான். அவனுக்கு வயதும் பதி னாறாயிற்று. கூர்ந்த அறிவும், பரந்த நோக்கமும் அரசியல் ஆற்றலுங் கொண்டவனாக அவன் விளங்கினான். அதுகண்டு மகிழ்ந்த குண சீலன் அவனைத் தன்னுடைய முதலமைச்சனைப் போலவே கருதி, அரசியல் காரியங்களை அவனு டன் கலந்தே செய்து வருவானாயினான். மதிவதன னும் நாட்டுமக்கள் முன்னையினும் பதின்மடங்கு நல்வாழ்வு பெற்று வாழ்வதற்கான எல்லா வழிகளை யுந் தேடியமைத்தான்; காடுகளைத் திருத்தினான்; ஆறு குளங்களை வெட்டினான்; கல்வி, வாணிகம், கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் குடி மக்கள் முன்னேறுவதற்கானவற்றை யெல்லாம் செய்து முடித்தான். மக்கள் வாழ்க்கைநிலை உயர உயர அரசாங்க வருவாயும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகுவதாயிற்று. இதுகண்ட குணசீலன் ஏழெட் டாண்டுகளாய்த் தான் நடுநாட்டு மன்னனுக்குச் செலுத்தத் தவறியிருந்த கப்பத்தொகையைச்

செலுத்துவதற்கு வழியேற்பட்டதை நினைந்து உளமகிழ்ந்தான்; செலுத்தவேண்டிய முழுத்தொகையையும் ஒன்றுசேர்த்து மந்திரிகளில் ஒருவன் வாயிலாகக் கோவிலூருக்கு அனுப்பிவைத்தான்.

ஏழெட்டாண்டுக் கப்பமும் ஒன்றாகச்செலுத்தப்பட்டதைக் கேள்வியுற்றான் குமரகண்டன். உடனே குணசீலனின் மந்திரியை அவன் வரவழைத்து நலம் வினவியபின், நாட்டு வளம் உசாவினான். அதற்கு அம் மந்திரி, நான்காண்டுகட்கு முன் குணசீலன் வேட்டைக்குச் சென்ற இடத்தில் பன்னிரண்டு வயதுள்ள சிறுவனொருவனைக் கண்டு அழைத்துவந்ததையும், அழகிலும், ஆற்றலிலும், அறிவிலும் ஒப்புயர்வற்று விளங்கிய அச்சிறுவன் இளவரசனாகி நாட்டுக்கு எதிர்பாராத வகையில் திறம்பட நலம் விளைத்து வருவதையும் விளக்கமாகக் கூறிப் புகழ்ந்தான்; மேலும் அச்சிறுவனைக் காட்டிற் கண்டபோது அவன் கைவிரல்களி லொன்று அறுபட்டிருந்த தென்றுங் கூறினான். உடனே, மதிவதனனாகத்தா னிருக்கவேண்டும் அச்சிறுவன் என்பதை ஊகித்தறிந்து கொண்டான் குமரகண்டன்; மந்திரி கூறிய அச்செய்தியைக்கேட்டுத் தான் மிகவும் மகிழ்வதாகவும், நாலைந்து நாட்களில் தான் குமரபுரிக்கு வந்து குணசீலனை நேரிற் காண்பதாகவுஞ் சொல்லி மந்திரியை வழியனுப்பினான்.

சொல்லியவாறே ஐந்தாம்நாட் காலை புறப்பட்டுக் குமரபுரி வந்து சேர்ந்தான் தீயோன். சேர்ந்தவன், தான் நினைத்தபடி மதிவதனனே அச்சிறுவனாக இருக்கக் கண்டு கடுஞ்சினங் கொண்டான். ஆயினும், அதனை அவன் வெளிக்காட்டவில்லை. அன்று மாலைப் பொழுதானவுடன் குணசீலனை விளித்தான்; "நான் நாளையும் இங்குத்தங்க நினைத்திருக்கிறேன். அதற்குள் முதன்மையான செய்தியொன்றை என் மகனுக்கு அனுப்பி வைக்க வேண்டும். உம் சிறுவன் மதிவதனன் அதைக் கொண்டு சேர்க்க உதவுவானாயின் மிகவும் நலமாக இருக்கும்" என்று கூறினான். குணசீலனும் அதற்கிசையவே, குமரகண்டன் பரபரப்புடன் ஒரு கடிதம் எழுதி அதை மதிவதனனிடங் கொடுத்து விரைவிற் கோவிலூர் கொண்டு சேர்க்குமாறு கேட்டுக்கொண்டான்.

மறுநாட் பொழுது புலருமுன் கடிதத்துடன் குதிரை யேறிப் புறப்பட்டான் மதிவதனன். காற்றைப்போற் கடுகிச் சென்று, உச்சிப்பொழுது கழிந்த நேரத்தில், அவன் கோவிலூர் நந்தவனத்தை யடைந்தான். அடைந்தவன், களைப்பு மேலிட்டவனாய்க் குதிரையை மரக்கிளை யொன்றிற் கட்டிவிட்டு அருகிலிருந்த பளிங்குமேடை யொன்றின்மீது படுத்து அயர்ந்துறங்கிவிட்டான்.

அத்தருவாயில், அரசன் மகளான குமுதினி தன் தோழிகளுடன் பொழுதுபோக்கிற்காக நந்த வனம் வந்திருந்தாள்; அவர்களோடு குமரகண்டன் மகளான நங்கையும் வந்திருந்தாள். அவ்வாறு வந்த நங்கை மற்றவர்களை விட்டுப் பிரிந்து தனியே பூக்கொய்த வண்ணம் மதிவதனன் படுத்துறங்கிய இடம் வந்துசேர்ந்தாள். சேர்ந்தவள், மன்மதனே மகனுருக் கொண்டு மண்மேல் வந்துற்றதுபோல, எழில் வாய்ந்த இளங்குமரன் ஒருவன் பளிங்கு மேடையிற் படுத்துறங்குவதைக் கண்டாள். கண்டதும் அவளையும் அறியாமல் அவன்மீது அன்பு பெருகப் பெற்றவளாய், அவனை யணுகி உற்று நோக்கினுள்; நோக்கிய அவள் கண்ணிற்கு மதிவதனன் மடியிற் செருகியிருந்த கடிதம் புலப்பட்டது. அக்கடிதத்தின்மேற் காணப்பட்ட எழுத்து தன்னுடைய தந்தையின் கையெழுத்தைப்போற் காணப்பட்டது; ஆகவே துணிந்து அக் கடிதத்தை மெல்ல வெளியிலெடுத்தாள் அழகி. "குமரபுரி முதலமைச்சர் மகனுர் நம்பிப்பிரான் காண வருவது" என்று முகவரி எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் தன் தந்தை தன் தமையனுக்கு என்ன செய்தியை அனுப்பி யிருக்கக் கூடும் என்று வியந்தவளாய்க் கடிதத்தை மெல்லத் திறந்தாள். கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

காலந் தாழ்க்கவேண்டாம்!

தங்கல்: குமரபுரி,
குரோதன ஆண்டு,
வைகாசித் திங்கள்; 6-ஆம் நாள்.

அன்பிற் சிறந்த மைந்தா!

நலம். விளக்கமாக எழுத நேரமில்லையாகை யால், குறிப்பாகவே எழுதுகிறேன். இக்கடிதம் கொண்டு வருபவனுக்கு நாளை இரவுப்பொழுது கழிவதற்குள் நஞ்சினைக் கொடு. ஏன், எதற்கு என்பதை விளக்க இது சமயமன்று. சொன்ன படி நீ செய்வாய் என்ற நம்பிக்கையினலேயே உனக்கு இக்கடிதம் எழுதுகிறேன். நாளை நின்று மறுநாட்காலை நான் அவ்விடம் வருவேன். பிற நேரில்.

இங்ஙனம், உன்னருமைத் தந்தை,
குமரகண்டன்,
நடுநாட்டு முதலமைச்சர்.

இதைப் படித்த நங்கை திடுக்கிட்டாள்; தந்தைக் குப் பித்துப் பிடித்துவிட்டதோ என்று ஐயுற்ருள்; மதிவதனன் மாண்டால், அவனுடன் உலகில் ஆணெழில் என்பதே அற்றுவிடும் எனக் கருதி ஞள்; தந்தைவிருப்பப்படி அக்கட்டழகன் இறப் பதிலும், தன் விருப்பப்படி தன்னை அவன் மணப் பதில் தவறொன்றும் இராதென்று முடிவு செய்து கொண்டாள்; உடனே சட்டெனக் கீழே யுட்கார்ந்

நங்கை கடிதத்தைத் திருத்துதல்

தாள்; தன் கண்ணில் தீட்டியிருந்த மையைச் சிறு விரல் நகத்தால் தொட்டுக்கொண்டாள்; கடிதத்திற் கண்டிருந்த "நஞ்சினை" என்னும் சொல்லைத் திறம் பட "நங்கையினை" என மாற்றிவிட்டாள். மாற்றியவள் கடிதத்தை முன்போல மடித்து ஒட்டி இருந்தவிடத்திற் செருகிவிட்டாள்; தன் கருத்தைக் கொள்ளைகொண்ட காளையை மற்றொரு முறை கண்ணாரப் பார்த்து உளமகிழ்ந்தவளாய் அவ்விடம்விட் டகன்றாள்.

சிறிதுநேரங் கழித்து விழித்துக் கொண்டான் மதிவதனன்; விரைந்து குதிரைமீதேறி மந்திரியாரின் மாளிகையை அடைந்து, நம்பியிடம் கடிதத்தைக்கொடுத்தான். கடிதத்தைப்படித்த நம்பிக்குச் சற்று நேரம் ஒன்றும் விளங்கவில்லை. பின் ஒருவாறு தெளிந்தவனாய், மதிவதனனை அன்புடன் வரவேற்று உள்ளிருக்கச்செய்தான்; அதன்பின் ஏவலாளர்களை விளித்து, அன்றிரவே பத்து நாழிகைக்குள் திருமணம் நிறைவேறுவதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் செய்துமுடிக்கக் கட்டளையிட்டான். நல்லகாலத்திற்கு எல்லாம் நலமாகவே இருக்கும் என்பதற் கேற்ப, மணமுடிக்கக் குறித்த பத்துநாழிகை நல்ல மங்கல *ஓரையாகவே இருந்தது. குறித்த நேரத்தில் மதிவதனனுக்கும் நங்

*ஓரை - இலக்கினம்

கைக்கும் நன்மணம் நிறைவேறியது. நங்கை தான் கொண்ட கருத்து நிறைவேறப் பெற்ருள்; மதிவதனன் தான் எதிர்பாராதவகையில் இன்ப மெய்தப் பெற்ருன்; நம்பியோ தந்தையின் கட்டளையைத் தான் தவருது நிறைவேற்றியதற்காக உள்ளம் பூரித்தான்.

மறுநாட் காலே, குமரபுரியிலிருந்து ஊர் திரும்பிவந்த குமரகண்டன், இதற்குள் மதிவதனன் ஒழிந்திருப்பானென்று மனப்பால் குடித்துக் கொண்டே, ஊரை யணுகினன். ஊரோ எங்கும் எழில்பெற அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மக்கள் கூட்டங் கூட்டமாகக் கூடி இரவில் நடைபெற்ற மணத்தின் சிறப்பைப் பாராட்டிப் பேசிக் கொண் டிருந்தனர். உண்மை இன்னதென் றறிய முடியாதவனுய்க் குமரகண்டன் விரைந்து வீடு சேர்ந்தான். வீட்டிலோ மங்கலக் கருவிகள் இன்னெலி எழுப்பிக்கொண்டிருந்தன. உள்ளே மணமகனும் மணமகளும்களிப்புடன்வீற்றிருந்தார்கள். இவற்றையெல்லாங் கண்ட குமரகண்டன் இடி விழுந்தவன்போ லானுன்; தன் சூழ்ச்சிகளொன்றும் பலிக்கவில்லையென்றும், ஏதோ ஒரு தெய்வீக ஆற்றல் உடனிருந்து மதிவதனனேக் காத்துவருகின்றதென்றுங் கண்டு கொண்டான். உடனே நல்லறிவு கொளுத்தப் பெற்றவனுய்த் தன் மனத்தி

லிருந்த தீய எண்ணங்களையெல்லாம் விட்டொழித்துத் தன் மருமகனை உச்சிமோந்து வாழ்த்தினான்.

அன்றுமாலை, அரசன் கோலாகலனிடமிருந்து சேவக னொருவன் வந்து, முதன் மந்திரியை அவர் மருமகனுடன் அழைத்து வருமாறு அரசன் கட்டளையிட் டுள்ளதாகக் கூறினான். உடனே மதிவதனனை அழைத்துக்கொண்டு குமரகண்டன் அரண்மனை யடைந்தான். அடைந்த அவனை, அரசன் விளித்துக் கோட்டைவள நாட்டிலிருந்து அங்கே வந்துள்ள முனிவ ரொருவரை அவனுக்கு அறிமுகப்படுத்தினான். பின்னர்,

" அமைச்சரே! உமக்குக் கிடைத்துள்ள பெரும்பேறு இன்னதென்று உமக்கு இன்னுந் தெரியாது. உம் மருமகன் கேரளவர்மனின் மகன்; கோட்டைவள நாட்டுக் குரியவன். அந்நாட்டு மக்கள் விரும்பி இம்முனிவர் வாயிலாய் இப்பொழுது செய்தி யனுப்பியுள்ளபடி, அந்நாட்டுக்கு அவனே அரசனாகப் போகிறான். எனக்கும் வயதாகிவிட்டது. ஆகையால் என் மகள் குமுதினியையும் அவனுக்கே மணஞ்செய்துகொடுத்து அவனை இந்நாட்டுக்கும் அரசனாக்கப் போகின்றேன்," என்று அரசன் கூறினான். அதுகேட்ட குமரகண்டன் அகமிக மகிழ்ந்தான்; ஆனந்தக் கூத்தாடினான்.

மறுநாட் காலை குமுதினிக்கும் மதிவதனனுக்கும் மணம் நடந்தேறியது. கோட்டைவள நாட்டிற்கும், நடுநாட்டிற்கும், மதிவதனனே முடிமன்னனென அறிவிக்கப்பட்டது. அரசாளப் பிறந்த மகன் மதிவதனன் என்றது உண்மையாயிற்று.

௬. குள்ளப்பெருமாள்

சித்தியாபுரம் என்னும் நகரத்தை யடுத்துப் பெருங்காடொன்று இருந்தது. அக்காட்டைக் கடந்தால் சிற்றூர் ஒன்று உண்டு. அச்சிற்றூரிற் கைம்பெண் ஒருத்தி வாழ்ந்துவந்தாள். அவளுக்கு ஒரே யொரு பிள்ளை யிருந்தான்; அவன் பதினாறு வயதுக்கு மேற்பட்டவனாயினும், பிறந்தபோதிருந்தது போலவே, அன்று கண்ட மேனிக்கு அழி வில்லாம லிருந்தான். அதனால் அவனை ஊரார் குள்ளப்பெருமாள் என்றே அழைத்துவந்தனர்.

ஒருநாள் குள்ளன் மக்கள் எல்லாரும் திருமணஞ் செய்துகொள்கின்றார்களே, தானும் ஏன் ஒரு பெண்ணை மணந்து கொள்ளக் கூடாது? என்று நினைத்தான். உடனே, அவன் தன் அன்னையினிடம் சென்று, "அம்மா! நாலு பேரைப் போன்று நானும் ஒரு கலியாணத்தைச் செய்து முடித்துக்கொள்ள வேண்டாமா! அதற்கு என்னென்ன வேண்டும்? உடனே சொல்!" என்று கேட்டான். அதுகேட்ட தாய், "மகனே! கலியாணம் என்றால் கிள்ளுக்கீரையா! அரிசி, பருப்பு அடங்கலும் வேண்டாமா! பெண்தேட வேண்டாமா! 'நாளைக்குக் கலியாணம் பிடி தாம் பூலம்' என்பது போலிருக்கின்றதே, நீ சொல்

வது! பதருதே! சிலநாள் பொறுத்துப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், அப்பா!" என்றாள்.

பார்த்தான் குள்ளன்; "நம் காரியத்திற்குத் தாயாரை நம்பினால் தரைமட்டமாக வேண்டியது தான்; நினைந்ததை நினைந்தபோதே முனைந்து, செய்து முடிப்பதன்றோ ஆண்பிள்ளைகட்கு அழகு; காலந் தாழ்த்தால் காரியம் வீண்! தாய் சொன்னதைப் பார்த்தால் ஒரு கலியாணத்துக்கு அரிசி, பருப்பு, பெண் ஆகிய மூன்றுந் தானே முதன்மையாய் வேண்டும்போலிருக்கின்றன. இஃது ஒரு பெரிய காரியமா! கலியாண வேலையை உடனே முடித்தல் வேண்டும்." என்று தனக்குள்ளே உறுதி செய்துகொண்டான்.

உடனே, அவன் வீடெல்லாந் தேடிப் பெருச்சாளி போன்ற பேரெலிகள் இரண்டைப் பிடித்துக் கட்டி, அவற்றிற்கு அல்லும் பகலும் நல்ல தீனி கொடுத்தான்; கொடுத்துக் குண்டுப் பெருச்சாளிபோல் அவற்றைக் கொழுக்க வைத்தான். பிறகு, அவன் அவற்றைக் கட்டியோட்டுவதற்கேற்ற வண்டியொன்றையுஞ் செய்துகொண்டான்.

அதன்பின் ஒருநாட் காலை, குள்ளன் தன் தாயிடஞ் சென்று, "அம்மா! எனக்கு இரண்டு காசு கொடு; வீட்டில் இரண்டறைகளை ஒழித்து வை. நான் இரண்டு நாழிகைக்குள் வருகிறேன்,"

என்று சொன்னான். சொல்லி, அவளிடம் இரண்டு செப்புக்காசும் அவன் கேட்டு வாங்கிக் கொண்டான்; எலிக் குதிரைகளை வண்டியிற் பூட்டி, அதில் ஏறி யுட்கார்ந்துகொண்டான்; வண்டியைக் கடைத்தெருவிற்குத் தட்டிவிட்டான். கடைத்தெருவிற் சென்றதும், அரிசிமண்டி யருகில், அவன் வண்டியை நிறுத்தினான்; நிறுத்தி, வண்டியைவிட் டிறங்கி மண்டிக்குட் சென்று, “செட்டியாரே எனக்கு ஒரு காசுக்கு அரிசி வேண்டும்,” என்றான். குட்டிப்பொம்மை போன்று நின்ற இக்குட்டையனைச் செட்டியார் உற்று நோக்கினார்; நோக்கியவர் வியந்து, அவன்மீது அன்பு கொண்டார்; “தம்பி! எனக்குக் காசு வேண்டாம். உனக்கு வேண்டும் அரிசியைப் பெற்றுக் கொள்!” என்று சொல்லி, “பை கொண்டு வந்தாயா?” எனக் கேட்டார். சிறுவன், “எனது வலக்காது நிறையக் கொட்டிவிட்டாற் போதும்” என்று விடை யிறுத்தான். செட்டியார் ஓர் ஆளைக் கூப்பிட்டு அப்படியே கொட்டுமாறு கட்டளையிட்டு விட்டார். அந்த ஆள் குட்டையனை அரிசியறைக் குக்கூட்டிக்கொண்டுபோய் ஒரு பிடி அரிசியைக் கையிலெடுத்தான்; இளைஞன் இடப் பக்கமாகப் படுத்துக்கொண்டு, ‘வலக்காதில் கொட்டு’ என்றான். அந்த ஆள் கொட்டின பிடியரிசி காதிற் போனவிடந் தெரியவில்லை. பிறகு அவன் பிடிபிடி

யாகக் கொட்டியுங் காது பிடித்துக்கொண்டே இருந்தது; பிறகு படிபடியாகவும் அவன் கொட்டிப் பார்த்தான்; அப்போதுங் காது வெறுமையாகவே காணப்பட்டது. பிறகு அவன் ஒரு மூட்டையை அவிழ்த்து அப்படியே கொட்டினுன்; அப்போதும் காது நிறைந்தபாடில்லை. மூட்டை மூட்டையாகப் பதினெட்டு மூட்டைகள் கொட்டியும் காதினுள் அரிசி இருந்தஇடந் தெரியவில்லை. என் செய்வான் வேலைக்காரன்! குட்டையன் காது நிறையக் கொட்டியனுப்பவேண்டு மென்பது முதலாளி கட்டளை யன்றோ? அரிசி கொட்டினவன் அலுத்துப் போனதைக் கண்ட சிறுவன், "அப்பா! இன்னும் இரண்டு மூட்டை கொட்டிவிடு, இருபதாக இருக்கட்டும்" என்றுன். இரண்டோடு ஒழியட்டுந் தொல்லையென அவ்வேலையாள் அப்படியே செய்தான். அவனிடமே ஒரு கந்தைத் துணியையும் வாங்கி அரிசிக் காதை அடைத்துக்கொண்டான் குள்ளன்; பின், வண்டியேறித் துவரம் பருப்பு மண்டிக்குப் போனுன்; அங்கேயும் அவ்வாறே இருபது மூட்டைப் பருப்பைப்பெற்று இடக்காதில் அடக்கிக்கொண்டு விரைவில் வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டுக்குள்ளே நுழைந்ததும் குள்ளன் அன்னையை அழைத்தான்; ஒழிக்கப்பட்ட அறைகளிரண்டையும் இழுத்துப் பூட்டிவிடச் செய்தான்;

பின் "அம்மா! என்னைக் கூரைமேல் தூக்கிவிடு," என்றான். தாய், "இஃதென்ன கூத்தோ!" என்று சொல்லிக்கொண்டே மகன் சொன்னபடியே அவனை வீட்டுக்கூரைமீது ஏற்றிவிட்டாள். கூரை மேற்சேர்ந்த குள்ளன், இரண்டறைக்கும் இடையிலுள்ள பகுதியிற் சென்று உட்கார்ந்து கொண்டான்; உட்கார்ந்து ஓடுகளைப் பிரித்தெடுத்து விட்டுச் சுவரின்மேல் கவிழ்ந்து படுத்துக்கொண்டான்; இரண்டு காதுகளையும் சாய்த்துச் சாய்த்து இடப் பக்கத்து அறையிற் பருப்பையும், வலப்பக்கத் தறையில் அரிசியையுங் கொட்டிவிட்டான். பின் அவன் தாயைக் கூப்பிட, அவள் வந்து பிள்ளையைக் கீழே இறக்கினாள். இறக்கினதும் அவன் அன்னையைப் பார்த்து, "அம்மா! நீ கொடுத்த இரண்டு காசும் இதோ செலவழியாமல் வீடுவந்து சேர்ந்துவிட்டன; வாங்கிக்கொள்! கலியாணத்துக்கு வேண்டிய அரிசியும் பருப்பும் காசில்லாமலே கிடைத்துவிட்டன. நாளைக்கு நான் பெண் பார்த்துக்கொண்டுவரப் போகிறேன். எனக்குக் கொஞ்சங் கட்டுச்சோறுமட்டுங் கட்டி வை." என்று சொன்னான்; சொல்லிவிட்டு அவன் எலிகளுக்குத் தீனிபோட்டுத் தண்ணீர்காட்டச் சென்று விட்டான்.

"நம் பிள்ளை அசகாயசூரனாயிருக்கின்றானே! ஒருவேளை யாராவதொரு பெண்ணை அவன் தேடிக்

கொண்டு வந்தாலும் வந்துவிடுவான்போ லிருக்கிறதே!" என்று தனக்குள்ளேயே கூறிக் கொண்டாள் குள்ளனின் தாய். பின்னர், விடியுமுன் அவள் தொலைவழிக்கு வேண்டிய கட்டுச்சோற்றையும், குட்டிக் குதிரைகளுக்கு வேண்டிய தீனியையும் வகையாகக் கட்டிவைத்தாள். பொழுதும் புலர்ந்தது; பெண்கொண்டுவர எண்ணி எலிகள் பூட்டிய வண்டியி லேறினன் குள்ளன்; கட்டுச்சோறு முதலியவற்றை வண்டியில் வாங்கிவைத்தான்; "அம்மா வீட்டைக் குறியாகப் பார்த்துக்கொள்" என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டான்.

சித்தியாபுரம் நோக்கிப் புறப்பட்ட வண்டி சிறிது நேரத்தில் பெருங் காட்டினுட் புகுந்தது. அப்போது நரியொன்று வண்டியருகில் வந்து, "யாரது?" என்று கேட்டது. "நரியண்ணு! என்னை உனக்குத் தெரியாதா? இப் பக்கத்தாரெல்லாரும் குள்ளப்பெருமாள் என்ருல் யாரென் றறிவார்களே! நான் சித்தியாபுரத் தரசனிடம் பெண் கேட்கப் போகிறேன்." என்ருன். "அப்படியாஞல் என்னையும் உடனழைத்துப்போ; அரண்மனையில் எனக்கு வேண்டிய இரை கிடைக்கும்." என்றது நரி. "சரி, எனது வலக்காதிற் புகுந்துகொள்!" என்று குள்ளன் சொன்ஞன் ; அதுவும் அவ்வாறே அவன் செவிக்குள் நுழைந்துகொண்

டது. வண்டி மீண்டும் புறப்பட்டு நடுக்காட்டை அடைந்தது. அங்கு வேங்கை யொன்று வழி மறித்து, "நில்!" என்றது. குள்ளன், "புலியண்ணு! தடை செய்யாதே, நல்ல காரியமொன்றை நாடி நான் நகர்செல்கின்றேன் ; வேண்டுமானுல் எனது



வேங்கை "நில்" என்றது.

வலக்காதிலுள்ள நரியண்ணனைக் கேட்டுச் செய்தி தெரிந்துகொள்!" என்றுன். உடனே நரி தலையை வெளிநீட்டி, "புலியண்ணு ! குள்ளனுர் பெண்கேட்கப் போகின்ருர்; நீயும் என்னுடன் வந்தால் நகரில் நல்ல இரை கிடைக்கும்." என்றது. புலியும் அதற்கு ஒத்துக்கொள்ளவே, குள்ளன் அதனையும் நரியுடன் வலக்காதிலேயே ஏற்றிக்கொண்டான்.

சற்றுநேரத்தில் காட்டைக் கடந்து வண்டி சித்தியாபுரம் எல்லையை அடைந்தது. சித்தியா புரம் எல்லையிலோடும் ஆறு அன்று வெள்ளம் மிகுந்திருந்தது. அந்த வெள்ளத்தில் தன் வண்டி தலைதடுமாறிப் போய்விடும் என்று கண்டு கொண்டான் அஞ்சாக் குள்ளன். ஆகவே, சற்றுச் சிந்தித்து, "கங்கை நங்காய்! பரமன் சடையிற் புகுந்துகொண்ட ஆறணங்கே! பெண்ணொருத் தியை மணக்க நாடி அக்கரையிலுள்ள சித் தியாபுர வரசனிடஞ் செல்கின்றேன்; இந்த மங்கள காரியத்திற்கு உன் உதவியும் வேண்டியிருந்தா லும் இருக்கும். ஆகையால் என்மீது கருணை வைத்து எனது இடக்காதில் இன்று மாலை வரை யிற் புகுந்திருக்க வேண்டுகிறேன்." எனச் சொன் னான்; சொல்லி, இடக்காதினை ஆற்று வெள்ளத் தின்மேற் சாய்த்தான். உடனே, குண்டோதரன் வயிற்றுக்குள் வையையாறு சென்றதுபோன்று, அவ்வாற்று நீரெல்லாம் குள்ளன் காதிற்குள்ளே சென்றுவிட்டது. உள்ளம் மகிழ்ந்தான் குள்ளன்; பின் ஆற்றைக் கடந்து சடுகுடுவென்று வண்டி யைச் செலுத்தி, நேரே சித்தியாபுரம் அரண்மனை வாயிலை அடைந்தான்.

சித்தியாபுர அரசனுக்கு அழகிற் சிறந்த பெண் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு அழகி

லும் அறிவிலும் சிறந்த மணமகள் எங்கிருந்து கிடைக்கப்போகின்ருளோ என்று அரசனும் அரசி யுங் கவலைகொண் டிருந்தனர். குள்ளப்பெருமாள் அரண்மனைவாயி லடைந்த சமயம், அரசன் தன் மனைவியுடனும் முதல்மந்திரியுடனும் மகளின் மணத்தைக் குறித்தே ஆலோசித்துக்கொண் டிருந் தான். வண்டியை வெளியில் ஓரமாக நிறுத்தி விட்டுக் காவலையெல்லாம் எளிதிற் கடந்து, உள்ளே வந்தான் குள்ளன்; நேரே அரசனிருக்கு மிடம் வந்து, "அரசே! வணக்கம். தாங்கள் பெண்ணுக்குப் பிள்ளை தேடி யலையவேண்டுவ தில்லை. நானே வந்துவிட்டேன். உங்கள் பெண்ணை மணக்க நான் நெடுநாளாக எண்ணி யிருந்தேன்." என்ருன். சற்றுநேரம் இச்சொற் கள் எங்கிருந்து வருகின்றன என்று அரசனுக் கும் மற்றையோருக்கும் புலப்படவில்லை; மேலுங் கீழும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். பார்த்தவர் கள், அறைக்கத வருகில் சிறு குள்ளனொருவன் நிற்கக் கண்டதும், முதலில் வியப்படைந்தனர். பின்னர் அரசன் வியப்புத் தீர்ந்து சினமிகுந்தவ ஞய், "அடே! நீ யார்? இங்கெப்படி வந்தாய்?" என்று அதட்டினன்; அதட்டிவிட்டுச் சேவகர் களை விளித்து, "முறை தெரியாத இக்குள்ளப் பயலை ஆட்டுக்கிடையுள் தூக்கியெறியச் செய் யுங்கள்!" என்ருன். உடனே சேவகர்கள்

குள்ளனை இழுத்துக் கொண்டுபோய் ஆட்டுக் கிடையுள் விட்டு, அவன்மீது ஆடுகளை விரட்டினர். குள்ளனே, "நரியண்ணா! இங்கே உனக்குச் சரியான இரை, இறங்கி வா!" என்றான். நரி காதைவிட்டு வெளியிற் குதித்து இரண்டு மூன்று கடாக்களைக் கடித்துக் கொன்றது; ஏனைய ஆடுகள் மூலைக்கொன்றாக ஓடிப்போய்விட்டன.

இதுகண்ட சேவகர்கள் விரைந்தோடி வேந்தனிடம் சென்று, நடந்ததைக் கூறினர்; அரசனும் சற்றுத் திகைத்தவனாய், "அப்படியானால், அப்பயலை மாட்டுமந்தையினுட் கிடத்தி, மாடுகளை அவன்மீது விரட்டுங்கள்!" என்றான். சேவகர்கள் குள்ளனிடம் திரும்பிச் சென்று சேர்வதற்குள், கொன்ற ஆடுகளைத் தின்றுவிட்டு, நரி குள்ளன் காதினுட் புகுந்துகொண்டது. குள்ளனோ வாட்டம் சிறிதுமின்றிப் பாட்டுப் பாடிக்கொண் டிருந்தான். சேவகர்கள் அவனைப் பிடித்துக் கொண்டுபோய் மாட்டுமந்தையினுட் கிடத்தினர். குள்ளன், "புலியண்ணா! உமக்குச் சரியான வேட்டை!" என்றான். உறுமலோசை செய்துகொண்டே வேங்கை வெளியே தாவிக் குதித்து, ஐந்தாறு மாடுகளை அறைந்து கொன்றது; மற்ற மாடுகள் இருந்தவிடந் தெரியவில்லை. சேவகர்களும் அலறிக்கொண்டு தலைகால் தெரியாமல் ஓடிவந்து அரசன்முன் வீழ்ந்து, "அப்பா!

பிழைத்தோம்!" என்று பெருமூச்சு விட்டனர். அரசன் நிகழ்ந்தது என்னவென்று கேட்டான். சேவகர்கள், "ஆண்டவனே! நாங்கள் உயிர்தப்பி வந்தது யார் புண்ணியமோ தெரியவில்லை; முன் அந்தக் குள்ளன் காதிலிருந்து நரியொன்று வெளிவந்து ஆடுகளைக் கொன்றது; இப்பொழு தோ அதே காதிலிருந்தே புலியொன்று வெளி வந்து சில மாடுகளை யறைந்துவிட்டது. நாங்கள் உயிர் தப்பினுற் போதுமென்று ஓடி வந்துவிட் டோம். காட்டு விலங்குகளெல்லாம் அவன் காது களிலேதான் குடியிருக்கின்றன போலும்! மற் ருெரு தடவை போனுல், யானை, சிங்கம், காண்டா மிருகம் முதலிய கொடுவிலங்குக ளெல்லாம் ஒவ் வொன்ருய் வெளிவரும்போற் ருேன்றுகின்றது. அரசே, எங்களை மன்னியுங்கள்! இப்போதே அவனுக்கு அரசகுமாரியை மணஞ் செய்து கொடுத்து ஊரைக் காப்பாற்றுங்கள்." என்று கதறினர். "அடே! என்ன சொன்னீர்கள்! கத்தரிக்காய்க்குக் காலுங் கையும் முளைத்தது போலிருக்கிற அப்பயலுக்கா, என் மகளைக் கொடுப்பது? அதைவிட அவளை ஆற்று வெள் ளத்திற் றள்ளிவிடுவேன்," என்று அரசன் வெகுண்டு கூறினுன்.

அச்சமயம், "அரசே! அதுவே தங் கள் விருப்பமாயின், அப்படியே செய்யுங்கள்.

தாங்கள் ஆற்றைத் தேடிச் செல்வதைவிட அரண் மனைக்குள்ளேயே நான் ஆற்றை வரவழைத்துக் கொடுக்கிறேன். தங்கள் திருக்கைகளாலேயே தங்கள் பெண்ணை அதில் தள்ளிவிடுங்கள்!" என்ற சொற்கள் பிறந்தன. குள்ளப்பெருமாள் அறை வாயிலின் வெளிப்புறம் நின்று, "கங்கா

அரசனும் மற்றையோரும் நீரிலமிழ்தல்

பவானியே! உன் பேராற்றலை இன்று சிறிது காட்டுவாயாக!" என்றான். உடனே, குள்ள னுடைய இடச் செவியினின்றும் ஆற்றுவெள் ளம் குபுகுபு வென்று நுங்கும் நுரையுமாகப் பொங்கிவந்தது. நொடிப் பொழுதிற் பண்டங்க ளெல்லாம் வெள்ளத்தில் மிதக்கலாயின; அரச னுக்கும் மற்றவர்களுக்கும் இடுப்புவரை நீரேறி

விட்டது. அப்போது குள்ளன் அரசனைப் பார்த்து, "இப்போதாவது பெண்ணைக் கொடுத்து உம்மைக் காப்பாற்றிக்கொள்ளப் போகிறீரா? அல்லது, உங்களை யெல்லாம் வெள்ளத்தில் இழுத்துச்சென்று ஊர்சிரிக்க வைக்கட்டுமா?" என்று கேட்டான். இதற்குள் அரசனுக்குக் கழுத்துவரை நீரேறிவிட்டது. ஆகவே, அரசன், "ஓ! அப்படியே பெண் கொடுக்கின்றேன்; இந்த வெள்ளத்தை முதலில் அடங்கச்செய்!" என்றான். குள்ளன் உடனே, "ஓ ஆறணங்கே! செவிக்குட் செல்வாய்!" என்று கூற, நீரெல்லாம் வற்றிவிட்டது. இதனைக் கண்டு அகமகிழ்ந்த அரசன், "குள்ளப்பெருமாள் என்ற பெயர் உனக்கே தகும். உன்போன்றவனுக் கன்றோ என் அருமை மகளை மனமுவந்து மணமுடித்துக் கொடுக்கவேண்டும்!" என்று மகிழ்வுடன் கூறினான்; பின், அன்றைத் தினமே கோதைக்குங் குள்ளனுக்கும் மாலை சூட்டி மணமுடித்து இருவரையும் ஊருக்கு அனுப்பிவைத்தான்.

மணமகனும் மணமகளும் எலிவண்டி யேறிச் சென்று, வழியில் ஆற்றையும்; புலியையும், நரியையும் அதனதனிடத்தில் விட்டுவிட்டு ஊர் சேர்ந்தார்கள். சேர்ந்ததும், பெண்ணும் பிள்ளையும் வீட்டுக்குள்ளே போக அவர்களைக் கண்ட அன்னை

அகமிக மகிழ்ந்து ஆனந்தக்கண்ணீர் உகுத்தாள். அப்போது குள்ளமாப்பிள்ளை அன்னையைப் பார்த்து, "அன்னாய்! அரிசி பருப்பு மில்லாமல், அரைக்காசும் செலவில்லாமல் கலியாணம் நடந்தேறிவிட்டது. உனக்கு வாய்த்துள்ள மருமகளோ சித்தியாபுரத்தரசன் குலமகள். இதோ, உன் மருமகளை உவந்தேற்றுக்கொள்" என்றான். அதுகேட்ட தாய் மகனையும் மருமகளையும் இறுகத் தழுவிக்கொண்டாள்; "சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை ஆண்பிள்ளைதான்!" என்று சொல்லி, இருவரையும் வாழ்த்தி வரங்கள் தந்தாள்.

சிறுகதை நூல்கள்

பொன்கதைக் கொத்து	அணு	4
சிறுவர்க்கான சிறுகதைகள்	,,	4
செந்தமிழ் நாட்டுச் சிறுகதைகள்	,,	4
சங்கநூற் சிறுகதைகள்	,,	4
விலங்கறிவுக் கதைகள்	,,	3½

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, **சென்னை.**